**தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவன சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் முகவர் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகவர் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் முகவர்

நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

முகவர் நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முகவர் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக முகவர் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக முகவர் நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் முகவர் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது முகவர் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது முகவர் நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் நேர் முறையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் தேவையான வெளிப்படுத்தல்கை |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளில் தேறிய காசுப்பாய்ச்சல் சமமான நடவடிக்கைகளின் மிகைகள் அல்லது பற்றாக்குறைகளுடன் இணக்கஞ்செய்து அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒரு பகுதியாக அல்லது நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | ள மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 4,628,125,254 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 3,231,216,479 ஆன காணிகளில் ரெக்கவ, கடோல்கெலே மற்றும் கற்பிட்டி என்ற காணிகளின் உரித்து கையேற்கப்படாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 268,750,000 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீள்மதிப்பீட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>குறிப்பு இலக்கம் 18 இன் கீழ் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யவேண்டியிருந்ததுடன் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கற்பிட்டி குடாவ பிரதேசத்தில் பல்லின விஷேட மீன்குஞ்சு இனப்பெருக்க கூடத்தை நிர்மாணிப்பதற்காக 03 ஏக்கர் காணி 2022 பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் 30 வருட காலத்திற்கு வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் கையேற்பதற்கு முன் அதாவது 2020 ஆம் ஆண்டின் போது அந்த காணியில் ரூபா 1,631,963 பெறுமதியில் நிமாணங்கள் மேற்கொண்டு நிமாணம் பூர்த்தி செய்ப்பபடாமல் | உரிய நிதி வழங்கப்படாமையின் அடிப்படையில் காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தது.<br><br>இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இந்த செயற்பாடுகளை மேற்கொள்ளும் இயலுமை தொடர்பாக ஆராயப்படுகின்றது.<br><br>வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதுட | நியமத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறை வேலையாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்படாமல் இடை நடுவில் நிறுத்தப்பட்ட மையால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 77 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ன் இதனை பயனற்ற செலவினமாக இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் . | |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த ஆண்டிலும், முன்னைய ஆண்டுகளிலும் மானியமாக கிடைத்த ரூபா 284,479,598 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 95 ஆம் பிரிவின் பிரகாரம் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,141,347 பெறுமதியான கணனி இயந்திரம் சொத்தொன்றாக மற்றும் அரசாங்க மானியமாக ஆண்டின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கொள்வனவு முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 7,814,050 தொகை முற்பணக் கணக்கில் வரவு வைத்து அரசாங்க மானியமாக வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் மானியம் தொடர்பாக கணக்குகளைச் சமர்ப்பித்தல் 2023 ஆம் ஆண்டில் இருந்து மேற்கொள்வதற்கு இணக்கத்தை தெரிவிக்கின்றோம். | நியமத்தின் பிரகாரம் வருமானங்களை கணக்கு வைக்கவேண்டி இருந்ததுடன் முற்பணங்கள் சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரித்தல் முகவர் நிறுவனத்தின் கொள்கையாக இருந்த போதிலும் அதற்கு முரணாக குத்தகை ஆதனங்கள் மற்றும் அரசாங்க | சீராக்கங்களுக்காக பல ஆண்டுகள் பரீட்சிப்பதற்காக கவனத்திற்கொள்ள வேண்டிய காலம் எடுக்கின்றமையால் இதனை 2023 ஆம் ஆண்டில் இருந்து | குத்தகை ஆதனங்கள் மற்றும் அரசாங்க மானியங்கள் உரிய நியமத்தின் பிரகாரம் கணக்கு வைக்கப்படல் |

| | | |
|---|---|---|
| மானியங்களுக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 17 மற்றும் 20 பின்பற்றப்பட்டிருந்தது. | சீராக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தலாக ரூபா 3,813,117 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 18,904,661 ஆனமையால் முதலீட்டு செயற்பாடுகளில் ரூபா 15,091,554 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த ரூபா 15,091,554 கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது.<br><br>ஏனைய செலவினங்களின் கீழ் ரூபா 2,026,004 மற்றும் ஆலோசனை சேவை செலவினத்தின் கீழ் ரூபா 13,065,550 காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது.<br><br>எதிர்காலத்தில் இதனை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளபடியான பெறுமதி வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) செயற்திட்ட செலவினத்திற்காக ரூபா 40,826,124 செலுத்தப்பட்ட போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வெளிப்படுத்தப்படாமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் இப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்ட செயற்திட்ட செலவினம் ரூபா 42,759,704 ஆகும். | இது தொடர்பாக பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடல்சார் இனப்பெருக்க நிலையமொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட பட்டியல் கணக்கீடு செய்யப்படாமையால் நடைமுறை வேலை ரூபா 298,615 இனாலும், முற்பணம் ரூபா 1,171,733 இனாலும், நிறுத்திவைத்தல் பணம் ரூபா 1,470,247 இனாலும் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கற்பிட்டியில் எல்லை வேலி நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்தத்தில் நிறுத்திவைத்தல் பணம் மற்றும் நடைமுறை வேலை கணக்கு ரூபா 268,380 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன நிர்மாணத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | கட்டிடத்திலேயே பொருத்தப்பட்ட ஆய்வுகூட அலுமாரிக்காக செலுத்தப்பட்ட ரூபா 981,852 தொகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட மையால் கட்டிடக் கணக்கு மற்றும் மீளாய்வாண்டின் இலாபம் என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன பொருத்துதல்கள் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (உ) | ஆளணிக் கோவை இலக்கம் 707, 724 மற்றும் 901 என்ற இலக்கங்களின் உத்தியோகத்தர்களிடம் இருந்து எந்தவொரு தொகையும் அறவிடப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் கடன் ரூபா 142,012 தொகை, ரூபா | இந்த வழுக்கள் 2023 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபைக்கு அறவிட வேண்டிய பணத்தை சரியாக அறவிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 57,275 மற்றும் ரூபா 12,047 தொகை பெறவேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. முன்னாள் பணிப்பாளர் நாயத்திடமிருந்து அறவிடுவதற்கு எந்தவொரு தொகையும் காணப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஊழியர் கடன் மீதியின் கீழ் அந்த உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 370,718 மீதி அறவிட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | ரூபா 42,671,795 ஆன நிலையான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 4,267,179 பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களுக்காக உரிய பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (எ) | ரூபா 16,868,610 ஆன மீன் உணவு உற்பத்தி இயந்திரம் ஒன்று 2018 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்ததுடன் அந்த இயந்திரத்தின் பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த இயந்திரம் மீன் உணவு உற்பத்திற்காக தனியார் கம்பனியொன்றின் காணியில் பொருத்தி இயந்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை நிபந்தனை 08 இன் பிரகாரம் 2020 யூன் 05 ஆந் திகதி முதல் மாதாந்த தவணை ரூபா 150,000 வீதம் முகவர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதும் இதுவரை எந்தவொரு தொகையும் செலுத்தப்படாமையால் 31 மாதங்களுக்காக கிடைக்க | **பொருட் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்படாமை**<br><br>இந்த சொத்துக்கள் பேலியகொடையில் அமைந்துள்ள Agri Star நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட போதிலும் நிறுவனத்திற்கு உரிய பிரகாரம் அறிவிக்கப்படாமையினால் பொருள் பெறுவனவு குறிப்பு விநியோகிக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்படவில்லை.<br><br>எதிர்பார்க்கப்பட்ட முறையில் உற்பத்தி யொன்று பெறப்படாதிருந்தாக அவர்கள் அறிவித்திருந்தனர். இதற்கு பிரதானமாக | சொத்துக்களின் உரித்து மற்றும் இருப்பு கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த ரூபா 4,650,000 தொகை நிறுவனத்திற்கு இழக்கப்பட்டிருந்ததுடன் கிடைக்க வேண்டியதாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் இந்த இயந்திரம் வெளிப்படுத்தப்படாதிருந்தை மயால் அதன் இருப்பும் உறுதிப்படுத்தப்படவில்லை. | இயந்திரத்தின் தொழில்நுட்ப கோளாறு தாக்கமளித்திருந்தது. அதனால் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | |
| (ஏ) | பிரதான பேரேடு மற்றும் குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய பணிக்கொடை செலவினம் ரூபா 11,148,995 ஆக இருந்த போதிலும் அந்த தொகை செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. பேரேட்டின் பிரகாரம் இதற்காக ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய மீதி ரூபா 135,936,911 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 105,551,761 மற்றும் மீளாய்வாண்டின் வருமானமாக ரூபா 19,222,513 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு கூற்றுக்கள் தயாரிக்கும் போது தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு இந்த வழுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிக்கொடை செலவினம் செலுத்த வேண்டிய மீதியாகவும், வருமானங்கள் சரியாகவும் கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | தற்போது வேலை பூர்த்தி செய்யப்பட்டு எஞ்சியுள்ள சகல நிதியும் உரித்து கோரப்படாதிருக்குமாயின் அரசாங்க வருமானத்திற்கு செலவுவைக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 6,370,037 ஆன செயற்பாடற்ற செயற்திட்டங்களில் ரூபா 5,306,016 செயற்பாடற்ற நிதியாக மாற்றி ரூபா | இந்த செயற்திட்டங்கள் அரசாங்கத்தின் நிதியம் அல்லாதிருந்ததுடன் ஒவ்வொரு நிறுவனத்தின் மூலமும் ஆலோசனை செயற்திட்டமாக பெறப்பட்ட பணமாக இருந்ததுடன் கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தப்படாததன் அடிப்படையில் நிறுத்திவைத்தல் பணமாகும். அதன் | உரித்துக் கோரப்படாத எஞ்சிய பணத்தை அரசாங்க வருமானத்தில் செலவு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,203,186 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பிரகாரம் இந்தப் பணம் அரசாங்க வருமானத்தின் கீழ் செலவு வைக்கப்படவில்லை. இந்த மீதியைப் பயன்படுத்தாததன் அடிப்படையில் உரிய பணம் இந்த செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை பராமரிப்பதற்கும், பழுதுபார்த்தலுக்கும் அல்லது நவீனமயப்படுத்துவதற்காக பயன்படுத்துவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பாக செயற்படுத்தும் அதிகாரம் 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவன சட்டத்தின் பிரகாரம் நிர்வாக சபைக்கு உரித்தாகும்.<br><br>நீர்த்தேக்க பிரிவுகளை வரைபடமிட்டு விற்பனை செய்வதற்காக சர்வதேச நீர்த்தேக்க அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட்ட நேரடி அனுப்புதலாக இருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | |
| (ஒ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 7.1.4 இன் பிரகாரம் | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் சரியாகும். 1981 இன் 54 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் முகவர் நிறுவனம் |

| | | |
|---|---|---|
| ஆலோசனைச் சேவை வருமானத்தில் 20-35 சதவீதத்திற்கு இடையிலான வீதமொன்று நிறுவனத்திற்காக ஒதக்கப்பட்டு சுற்றறிக்கையின் 7.1.5 இன் பிரகாரம் நிதியத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். எனினும் அவ்வாறு அறவிடப்பட்ட ரூபா 18,714,642 தொகை நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்குவைக்கப் பட்டிருந்தது. இந்த சுற்றறிக்கைக்கு உரித்தற்ற உத்தியோகத்தர்களின் மருத்துவப் பட்டியல்களை மீளளிப்புச் செய்வதற்காக மருத்துவ நிதியமொன்றை கட்டியெழுப்பி 05 சதவீதம் அதாவது 2,211,650 தொகை மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதியத்தின் மீதி ரூபா 4,965,714 ஆகும். | ஆம் இலக்க தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவன சட்டத்தின் பிரகாரம் 29(1) 2 இன் (அ)(ஆ)(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் சரியாகும்.<br><br>ஆலோசனை சேவையொன்று வழங்குவதன் மூலம் கிடைக்கின்ற தொகையில் நேர் செலவினம் மற்றும் வரிகளைக் கழித்து எஞ்சிகின்ற மிகுதியில் 20 வீதம் - 30 வீதத்திற்கு இடையிலான அளவொன்று வெகுமதி வருமானமாக கவனத்தில் கொண்டதன் பின்னர் எஞ்சிய மீதி நேர் மற்றும் நேரில் பதவியணியினருக்கு செலுத்த முடியுமாக இருந்த போதிலும் நிர்வாக சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் 5 சதவீதம் மருத்துவம் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கான நிதியமொன்றை ஏற்படுத்தியதன் பின்னர் ஊழியர் பங்களிப்புக்காக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டிய ரூபா 25,878,728 மீதியில் 05 வருடங்களை விஞ்சிய பெறுமதி ரூபா 8,143,254 மீதிக்காக உரிய பட்டியல், உடன்படிக்கை போன்ற எழுத்து மூல | 8,143,254 | உரிய பட்டியல், உடன்படிக்கை போன்ற எழுத்து மூல சான்றுகள் | கணக்காய்விற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் குறைபாடுகளை ஏற்றுக்கொள்கின்றோம். இது எதிர்காலத்தில் இடம் பெறாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். | கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டிய சான்று ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் உரித்துக் கோரப்படாத மீதிகள் அரசாங்கத்தின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இந்த மீதி தொடர்பாக கண்டறிந்து உரித்து கோரப்படாதிருக்குமாயின் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | வருமானத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந்திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் II பகுதியின் 7.2 ஆம் பந்தியின் வழிகாட்டி இலக்கம் 11 இன் பிரகாரம் நேர் கிரயம் மற்றும் பொது மேந்தலை கிரயத்தின் அடிப்படையில் கட்டணம் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்ததுடன் அறவிடப்பட்ட கட்டணத்தில் செலவாகின்ற நேர் கிரயத்தை கழித்து மிகுதி தொகையில் 20-35 சதவீதம் வரை நிறுத்திவைக்கப்பட்ட அளவாகவும், 5-10 சதவீதம் பொது மேந்தலைக்கான கொடுப்பனவும், 65 சதவீதத்திற்கும் 85 சதவீதம் வரை நேர் மற்றும் மறைமுகமாக தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் செலவிடப்பட்ட நேர் கிரயம், பொது மேந்தலை கிரயம் மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் செலுத்த நேர் மற்றும் நேரில் செலவினங்கள் | 79,491,371 | சுற்றறிக்கை பிரகாரம் நேர் கிரயம், பொது மேந்தலைக் கிரயம் இலாப எல்லையின் அடிப்படையில் ஆலோசனை சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அந்த கட்டணம் மதிப்பீடு செய்யப்படுகின்ற முறை தொடர்பான விபரங்கள் | உரிய கணிப்பீடுகளுடன் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | கணக்காய்விற்காக எதிர்பார்க்கப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எவ்வளவு என பேரேட்டில் தனித்தனியாக காண்பிக்காமல் ஆலோசனை சேவை செலவினமாக ரூபா 79,491,371 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒவ்வொரு விடயத்திற்காகவும் செலவிடப்பட்ட செலவினங்கள் எவ்வளவு என உறுதிப்படுத்தப்படாமையால் இதன் சரியான தன்மையை ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நேர் கிரயம், பொது மேந்தலைக் கிரயம், இலாப எல்லையின் அடிப்படையில் ஆலோசனை சேவைகளுக்காக அறவிடப்பட்ட கட்டணம் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அந்த கட்டணங்கள் கணிப்பிடப்படுகின்ற முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | | | |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் V-5066 செயற்திட்டம் கடன்கொடுத்தோர் தனிப்பட்ட மீதிகளின் கீழ் அல்லாத தனியார் நிறுவனமொன்றிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 302,866 செலுத்தி ரூபா 202,679 ஆண்டின் இறுதியில் அந்த கடன் | 202,679 | தனிப்பட்ட மீதிகளின் கீழ் செலுத்தப்படாத கடன் கொடுத்தோரிடமிருந்து செலுத்த வேண்டியவைகள் கணக்கு வைக்கப்பட்ட முறையின் சரியான தன்மை. | அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டமையால் இந்த தொகை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| கொடுத்தோருக்கு செலுத்த வேண்டியதாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது டன் அதன் சரியான தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட வில்லை. | | | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 21,546,893 ஆன வியாபாரம் மற்றும் ஏனைய பெறுவனவு மீதிகளுக்கிடையே 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,328,522 ஆன முற்பணம், ஏனைய கடன்பட்டோர் மற்றும் ஊழியர் கடன் என்பவற்றை அறவிடுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெற வேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 137(5) | பிரமாணத்திற்கு முரணாக 2023 ஆம் ஆண்டின் போது கிடைக்க பெற்ற பொருட்களுக்காக 2022 திசெம்பர் மாதம் வரையில் ரூபா 7,814,050 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை அரச வணிக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 1,651,521.00 தொகை காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட | பிரமாணத்திற்கு இணங்க நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இருப்பை பெற்றுக் கொள்வதற்காக செலுத்தப்பட்ட தொகையாகும்.<br><br>எஞ்சிய தொகைக்காக அந்நியச் செலாவணி செலுத்துதல் வழங்குனரின் நிபந்தனைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. இந்த கம்பனி சர்வதேச பிரதான தர ஆராய்ச்சி உபகரணங்களை உற்பத்தி செய்யும் கம்பனியாக இருந்ததுடன் இலங்கையில் எப்போதாவது ஒரு உபகரணம் கொள்வனவு செய்கின்றமையால் உரிய நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியிருந்ததுடன் பேரம்பேசும் இயலுமை மிகவும் குறைவாகும்.<br><br>இவ்வாறன விடயங்களைக் கொண்டு கணக்காய்வில் இவ்வாறான கொள்கை வழங்கல் நிறுவனமும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். | |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் இராண்டாவது பகுதியின் 11 ஆம் பிரிவு | | முகவர் நிறுவனத்திற்கு அமைச்சு, ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து கிடைத்து எதிர்காலத்தின் போது செலவிடுவதற்கு எஞ்சி காணப்பட்ட ரூபா | இதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.<br><br>சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் நிர்வாக சபைக்கு | உரிய சட்டம் மற்றும் சட்ட விதிகளின் பிரகாரம் நிதியினை முதலீடு செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 15,000,000 தொகை நிதிச் சட்டத்தின் பிரகாரம் பொதுத் திறைசேரியில் வைப்புச் செய்யப்படாமல் குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இதற்கான அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் உள்ளது. | |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் | | | |
| (i) | பெ.வ.கோ. 5.4.5 | என்ட்டி டிப்ரிடேசன் பிங்கர்ஸ் (Anti-Depredation Pingers) உபகரணம் மற்றும் டெம்பிரேச்சர் டெப்த் ரெக்கோடர் (Temperature Depth Recorder) என்பவற்றை கொள்வனவு செய்யும் பெறுகைகள் இரண்டிலும் ரூபா 7,931,201 ஆன முழுத் தொகையும் 2022 ஆம் ஆண்டில் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்ததுடன் எந்தவொரு முற்பணக் காப்புறுதியையேனும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கம்பனி சர்வதேச பிரதான தரத்தில் ஆராய்ச்சி உபகரணங்களை கொள்வனவு செய்யும் கம்பனியாக இருந்ததுடன் இலங்கையில் எப்போதாவது ஒரு தடவை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றமையால் உரிய நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியிருந்ததுடன் பேரம் பேசும் இயலுமை மிகவும் குறைவாகும்.<br><br>2022 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியின் பாதகமான தாக்கம் மற்றும் வங்குரோத்து அரசாங்கமாக வெளிநாட்டில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான விடயங்களைக் கொண்டு கணக்காய்வில் இவ்வாறான கொள்கை வழங்கல் நிறுவனங்களும் கவனத்திற் | முற்பணம் செலுத்தும் போது தேவையான காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொள்ளப்படல் வேண்டும். | |
| (ii) | பெ.வ.கோ. 8.9.1(ஆ) | மேற்கூறப்பட்ட உபரகணங்கள் இரண்டும் மற்றும் ரூபா 1,889,975 ஆன லைட் வெயிட் டுவல் பிரீக்குயின்சி எகோ சவுண்டர் இயந்திரம் (Light Weight Dual Frequency Echo Sounder) கொள்வனவு செய்யும் பெறுகைகள் மூன்றிற்காகவும் உடன்படிக்கைளில் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | மேற்கூறப்பட்ட விளக்கம் உரித்தாகும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் தேவைகளின் பிரகாரம் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் வேண்டும். |
| (iii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் மேலதிகம் 35 | ரூபா 500,000 வரை மாத்திரம் நேர் ஒப்பந்த பெறுகை முறைமை பின்பற்ற வேண்டியிருந்த போதும் அதற்கு முரணாக (இ)(i) இல் குறிப்பிடப்பட்ட இரண்டு பெறுகைகளுக்காகவும் நேர் ஒப்பந்த முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ள வில்லை. இந்தக் கம்பனிக்கு உரிய உற்பத்தியினை மேற்கொள்கின்ற தனி வழங்குனர் ஆகும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உரித்தான முறைமையை தெரிவு செய்வதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஒப்டோபர் 02 ஆம் திகதிய நிதி அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் இலக்கம் 05/2020 | 2019 பெப்ரவரி 05 ஆம் திகதி விற்றுத்தீர்க்கப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட இலக்கம் 58-1378 மற்றும் 251-0577 என்ற பதிவு இலக்கங்களை உடைய செயற்பாடற்ற இரண்டு வாகனங்கள் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டு வரையில் ஒரு வாகனம் மாத்திரம் விற்பனைக்காக எஞ்சியுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 67,477,464 அதிகரிப்பாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,457,924 ஆகும். அதன் பிரகாரம் விளைவுகளில் ரூபா 70,935,388 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்திட்ட ஆலோசனை சேவை வருமானம் ரூபா 74.7 மில்லியனாலும், ஏனைய வருமானம் ரூபா 11 மில்லியனாலும் மற்றும் பணிக்கொடை மிகை ரூபா 19 மில்லியனாலும் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடல்சார் இனப்பெருக்க நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 34,993,077 பெறுமதியில் தனியார் நிறுவனமொன்றிற்கு 2020 ஒக்டோபர் 07 ஆம் திகதி ஒப்பந்தம் கையளித்து முற்பணத்தையும் உள்ளடக்கி ரூபா 15,937,388 தொகை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட போதிலும் இந்த நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையால் செலவினங்கள் பயனற்றதாகி இருந்தது. இதனால் செலுத்தப்பட்ட ரூபா 2,432,290 ஆன முற்பணத் தொகை அறவிட முடியாதிருந்ததுடன் பெறுமதி ரூபா 1,746,654 ஆன செலாற்றல் காப்புறுதியும் 2022 மார்ச் 18 ஆம் திகதி காலாவதியாகியிருந்தது. அந்தக் காப்புறுதியின் திகதியை நீடித்துக் கொள்வதற்கோ அல்லது பணமாக்கிக் கொள்வதற்கோ முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு அவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையும் கணக்காய்வில் வெளிப்படுத்தப்படவில்லை. | இந்த ஒப்பந்தத்தின் வேலை நடவடிக்கைகள் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பொறியியலாளர் அறிவித்துள்ளார்.<br><br>2022 ஆம் ஆண்டிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை தொடர்ச்சியாக செலவிட முடியாமல் உயர்வடைந்து சென்றதன் அடிப்படையில் வழங்குனர் செயற்பாடுகளை நிறுத்தியிருந்தார். | ஒப்பந்த நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது ஆக்கபூர்வமாகவும், விளைவற்றதாக இல்லாத வகையிலும் மற்றும் நட்டம் ஏற்படாத வகையிலும் நிறுவனம் செயற்பட வேண்டியிருந்ததுடன் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவன சட்டத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற 4 அவது பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் பின்வரும் இலக்குகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (அ) மீன்பிடி கப்பல்கள், மீன்பிடி சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் மீன்பிடி முறைகளை விருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல். | அதிகாரத்தில் மீன் பிடிப்பதற்காக தற்போது காணப்படுகின்ற முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் காணப்படுகின்ற கரமல்வலைகளை மாற்றியமைத்தல் தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொண்டு நாரா மீன்பிடி தொழில்நுட்ப பிரிவுடன் மேற்கொள்ளப்பட்டது. தற்போது பயன்படுத்தப்படுகின்ற கரமல் வலைசார்ந்தவைகளின் வலை மாதிரியில் நிலைபேறான மீன் பிடித்தலுக்கு பதிலாக சுற்றாடலுக்கு சாதகமானதாக மாற்றுதல் மற்றும் விருத்தி செய்தல் தொடர்பாக விரிவான ஆய்வொன்று மேற்கொண்டு பரிந்துரை அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>மீன்பிடி அமைச்சினால் திருகோணமலை கடல் வலயத்தில் மீன்களை ஒன்றுசேர்க்கும் கருவிகளாக கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ள உடைந்த வாகனங்கள் மற்றும் படகுகுகள் சார்ந்த மீன் உற்பத்தி மற்றும் மீன் இனம் மற்றும் அதன் அமைப்பு மாற்றங்கள் மற்றும் சமுர்த்திரம்சார் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற தகவல்கள் தொடர்ச்சியாக | முகவர் நிறுவனத்தின் சகல நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மேலும் அவதானிக்கப்படுகின்றது.

இறால் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்ற நலனாளிகளை அபிவிருத்தி செய்வதற்காக கப்பலை விருத்தி செய்வதற்கும், அவற்றை தரையிறக்குவதற்காக உள்ள இடவசதிகளைக் கண்டறிந்து தொழில்நுட்ப அறிக்கை ஒன்றை வழங்குவதன் மூலம் இறால் ஏற்றுமதி பொருளாதாரம் மற்றும் தொடர்புடைய தீர்மானங்களை எடுப்பதற்கு நேரடியாக பரிந்துரை வழங்குதல்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகள் தொடர்பான முறையான விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்ட சுற்றாடலுக்கு சாதகமான முறைமையினை அறிமுகப்படுத்துவதற்காக தேவையான பரிந்துரைகள் மீன்பிடி திணைக்களம் மற்றும் மீன்பிடி அமைச்சிற்கு வழங்குதல்.

இலங்கையின் வடக்கு மற்றும் வடமேல் கடல் வலயங்களில் இடம்பெறுகின்ற இந்திய ரோலர் படகு மற்றும் இலங்கையர்களது மீன்பிடி ரோலர் படகுகள் தொடர்பாக கண்டறிந்து புதிய மீன்பிடி இடங்களைக் கண்டறிவதை வரைபடமாக்கி தேவையான அறிக்கை மீன்பிடி அமைச்சிற்கு வழங்குதல்.

தடைசெய்யப்பட்ட வலை கருவிகளில் உள்ள தாக்கங்கள் போன்றவை தொடர்பாக விஞ்ஞான ரீதியில் ஆய்வுசெய்து, கௌரவ நீதிமன்றத்திற்கு விஷேட அறிக்கையொன்றை வழங்குவதன் மூலம், தடை செய்யப்பட்ட மீன்பிடி கருவிகளைப் பயன்படுத்துவதை தடுப்பதற்காக மீனவர்களை உச்சாகமூட்டுதல் மற்றும் அதன் மூலம் சுற்றாடலுக்கு சாதகமான முறைமையின் மூலம் நிலைபேறான மீன்பிடியொன்றை உள்நாட்டு பொருளாதாரத்திற்கு

| | | |
|---|---|---|
| | | பங்களிப்பதற்கு வழிகாட்டுதல்.<br><br>தங்கூஸ் வலைகளுக்காக காணப்படுகின்ற சட்டத்தில் ஏதாவது சலுகைகள் வழங்க முடியுமா எனக் கண்டறிந்து மீன்பிடி அமைச்சிற்கு விடயங்களை அறிக்கையிடுவதற்காக அந்த இரண்டு வகையான வலைகளையும் பயன்படுத்தி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ரிதியகம, கட்டக்கடுவ மற்றும் முருத்தவெல என்ற குளம் சார்ந்த பகுதிகளில் ஆராய்ச்சியினை மேற்கொண்டு, அந்த அறிக்கை உரிய தரப்பினருக்கு வழங்குவதன் மூலம் இலங்கையில் உள்ளக நீர்த் தேக்கங்களில் நிலைபேறான மீன்பிடியினை ஸ்தாபிப்பதற்கு நேரடியாக பங்களிப்பினை வழங்குதல். |
| (ஆ) | மீனவர்கள் மற்றும் அவர்களின் தங்கியிருப்பவர்களின் நலன்களை உள்ளடக்கி மீன்பிடிக் கைத்தொழிலை சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மேம்படுத்துதல் மற்றும் பேணிச்செல்லல். | சமூக பொருளாதார மற்றும் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி பிரிவின் மூலம் 2013 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நடாத்திச் செல்லப்படுகின்ற நாரா மீன்பிடி தகவல் நிலையம் மற்றும் மீன்பிடி தகவல் சேவை மீனவர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களின் நலன்களை உள்ளடக்கி கைத்தொழிலில் சமூக ரீதியிலும், பொருளாதார துறைகளை மேம்படுத்தும் இலக்கிற்கு பங்களிப்பதாகும்.<br><br>அதற்கு மேலதிகமாக சமூக பொருளாதார மற்றும் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி பிரிவின் மூலம் மீனவர்களினதும் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களினதும் நலன்புரிகளுக்காக தேவையான கொள்கை ஒன்றை தயாரிப்பதற்காக மீன்பிடி அமைச்சி உள்ளடக்கிய உரிய நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>இலங்கையில் களுத்துறை |

மாவட்டத்தில் மொரகொல்ல கரையோரம் சார்ந்த மாற்று வருமானம் உழைக்கின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பான ஆய்வு அறிக்கை தயாரித்தல் சமூக பொருளாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிப் பிரிவினால் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) இனால் மீன்பிடி அமைச்சு ஒன்றிணைந்து மேற்கொண்ட மீன் இல்லாது போதல் மற்றும் அழிவடைதல் (Fish loss and waste) தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் அது தொடர்பாக பகுப்பாய்வுசெய்து மீன்கள் அழிவடைதலை குறைத்து மீனவர்களினதும், அவர்களில் தங்கியிருப்பவர்களினதும் நலன்களுக்காக பின்பற்றப்பட வேண்டிய பல்வேறு தீர்வுகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே சிலாபம் குடா சார்ந்த பகுதியில் இரால் தொழில் காரணமாக தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக களத்திற்குச் சென்று உரிய தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (இ) | மீன் சார்ந்த உற்பத்திகளை மீள் தயாரித்தல், ஆராய்ச்சி மற்றும் சந்தைப்படுத்தல். | 2022 ஆம் ஆண்டின் போது கீரி மீன் விஷேட மூலமாகக்கொண்டு மாசி தூளிற்காக இயற்கையாக கெட்டுப்போகாத பொருட்களை சேர்த்து தரத்தன்மை மற்றும் கெட்டுப்போகாமல் வைத்திருக்கக் கூடிய இயலுமையை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தி வெற்றிகரமான பெறுபேறு அடையப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறே முழுமையாக மரக்கறி சார்ந்த இனிப்பு வகையான Vegan Candy கடற்பாசியில் பெறப்பட்ட |

கெரஜினன் மற்றும் விற்பனைக் கடைகளில் பெக்டீன் பல்வேறு விகிதத்தில் கலந்து அதன் தரத்தன்மை மற்றும் கெட்டுப்போகாமல் வைத்திருக்கக்கூடிய காலம் (shelf life) அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

இதற்கு மேலதிகமாக ‘‘கொட்டனி’’ என்ற பெயருடைய கடற்பாசி விஷேட வகையில் பெறப்பட்ட ‘‘கெரஜினன்’’ இரசாயனம் சுத்திகரித்தல் செயற்பாடுகளின் போது உலர்த்தும் தொழில்நுட்ப (Drying Techniques) பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் போது அதன் தரத்தன்மை அதாவது பௌதீக மற்றும் இரசாயன தரத்திற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் ஆய்வு செய்யப்பட்டிருந்தது.

Trigger Fish பெயருடைய மீன் விஷேடமாக பல்வேறு முறைகளில் ஜாடி தயாரித்து அதன் தரத்தன்மை பரீட்சித்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை கடல்சார் பல்கலைக்கழகத்தில் உணவு தொழில்நுட்பவியலைப் பின்பற்றுகின்ற மாணவர்களுக்காக பயிற்சி பாடநெறியும் கடந்த ஆண்டின் போது இந்தப் பிரிவின் மூலம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஈ) | நீரியல் வளங்களை பயன்படுத்துதல், திட்டமிடுதல், அவை தொடர்பாக ஆராய்ச்சிகளை நடாத்துதல், அவைகளை அபிவிருத்தி செய்தல், நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் ஈடுபடுகின்ற நிறுவனங்களின் | மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் தொடர்பாக 2022 இன் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளை இணைப்பினை ஏற்படுத்துதல். | | |
| (உ) | 1996 இன் 32 ஆம் இலக்க சட்டத்தில் திருத்தப்பட்ட 18 ஆவது பிரிவின் பிரகாரம் 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனச் சட்டத்தின் விஞ்ஞான ரீதியான அல்லது தொழில்நுட்ப ரீதியான குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதும் அவ்வாறான குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். நியமிப்பதற்காக கோரப்பட்டுள்ளது. தற்போது நியமிக்கப்பட்டுள்ளது. | ஆய்வு ரீதியான அல்லது தொழில்நுட்ப ரீதியான குழுவொன்று நியமித்து தேவையான பணிகள் மற்றும் இலக்குகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (ஊ) | பிடிபடாத மீன் வகைகளை பிடிப்பதற்காக ஆராய்ச்சி மற்றும் நவீன உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு 200 என்ட்டி டிப்ரிடேசன் பிங்கர்ஸ் (Anti-Depredation Pingers) உபகரணங்கள் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 5,289,276 தொகை செலுத்தப் பட்டிருந்தது. கேள்வி ஆவணத்தில் 16 மாதிரிகள் காண்பிக்கப்பட்ட | பிஸ்டெக் மெரைய்ன் நிறுவனத்திலிருந்து இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையினால் அந்த நிறுவனத்தின் உற்பத்திக்கான மாதிரிகள் கேள்வி ஆவணங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்திலிருந்து இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் அதிர்வெண் மாத்திரம் குறிப்பிட்டு கூறுவிலை பெறப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறே இந்த உபகரணங்களைப் பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய நடைமுறை ரீதியான பல பிரச்சினைகள் சிலவற்றுக்காக (கடலில் களவாடல், உபகரணங்களுக்கு ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் மற்றும் பயன்பாட்டிற்காக) அனுபவமுள்ள மீனவர்களுடன் | அவசர தேவைகளுக்காக கொள்வனவுகளை மேற்கொண்டு அந்தப் பொருட்கள் தேவைகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் வழங்குனர் களிலிடமிருந்து கூறுவிலைகள் பெற்றுக்கொள்ளும் போது அந்த 16 மாதிரிகளில் ஒன்றினது அதிர்வெண் (Frequency) மாத்திரம் உள்ளடக்கி கூறுவிலை பெறப்பட்டு இந்த கேள்விதாருக்கு கையளிக்கப்பட்டிருந் தது. இந்த உபகரணங்கள் அவசர தேவையாகக் குறிப்பிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட 200 அலகுகளில் 195 அலகுகள் நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 2023 செப்டெம்பர் 12 ஆம் திகதி வரை எஞ்சி இருந்தது. | கலந்துரையாடி தீர்வினைக் கண்டறிய வேண்டி ஏற்பட்டிருந்தது. மிகவும் பொருத்தமான நபர்களைக் கண்டறிவதற்கும் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் காலம் எடுத்தமையினால் சில மாதகாலம் களஞ்சியத்தில் வைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.<br><br>தற்போது இந்த உபகரணங்களின் பயன்படுத்தலுடன் கடலில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் கிடைக்கின்ற பெறுபேறுகளை மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (எ) | இலங்கையில் மீன்பிடி நிலப்பகுதியை எதிர்வுறும் முறைமையை வலுப்படுத்துவதற்காக ரூபா 2,641,925 பெறுமதியில் டெம்பிரேச்சர் டெப்த் ரெகோடர் (Temperature Depth Recorder) உபகரணம் | இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ஒருவல் பகுதியில் (longline) ஆழ வீச்சு 75 – 125 மீற்றர் ஆன ஆழம் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் மீன்பிடி பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் போது அதிக ஆழத்திற்காக ஈடுபடுத்தும் தேவையொன்று ஏற்படுமாயின் அந்த தேவைக்காக 5 – 500m வீச்சு எங்களால் வழங்கப்பட்டிருந்தது. வழங்குனர் இந்த மீற்றர் 1 – 270 உபகரணம் | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நிறுவனம் நடவடிக்கை எடுகக வேண்டியிருந்ததுடன் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிகளை உரித்தாக்கிக் கொள்ளல் பெறுகைக் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மாதிரியின் ஆழத்தின் வீச்சு (Depth range) முகவர் நிறுவனத்தின் தேவையின் பிரகாரம் 5 மீற்றர் முதல் 500 மீற்றர் வரை காண்பிக்கப்பட்ட போதிலும், 01 மீற்றர் முதல் 270 மீற்றர் வீச்சுக்காக வழங்கிய நிறுவனம் சமர்ப்பித்த 17 மாதிரிகளில் ஒரு மாதிரி மாத்திரம் பூர்த்தி செய்த வழங்குநருக்கு அந்தப் பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் முகவர் நிறுவனத்தின் மாதிரியில் பற்றரியின் ஆயுட்காலம் 09 வருடமாக குறிப்பிடப்பட்டிருந்த வழங்குனரால் பற்றரியின் ஆயுட்காலமாக ஒரு வருட காலம் உத்தரவாதம் குறிப்பிடப்பட்டிருந்தது. | 400 மீற்றர் வரை ஆழத்தில் பயன்படுத்தக்கூடியதாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. அதனால் நாரா நிறுவனத்தின் ஆராய்ச்சி தேவையினை பூர்த்தி செய்கின்றமையால் மீற்றர் 1 – 270 வீச்சு பொருத்தமாக இருந்ததாக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. வழங்குனர் பற்றரியின் ஆயுட் காலமாக 09 வருடங்கள் குறிப்பிட்டு 10 நிமிட நேரத்தில் வெப்பம் மற்றும் அமுக்கம் அளவிடப்படுகின்றது. அதனை விட குறைந்த கால வீச்சுடன் அளக்கும் போது அந்தப் பெறுமதி மாறுபட முடியும். அதனால் பற்றரியின் ஆயுட்காலத்தை அளக்கும் முறையை அடிப்படையில் உத்தரவாதக் காலம் தொடர்புபடுத்தப்படவில்லை.<br><br>01 வருட உத்தரவாதக் காலத்தில் உபகரணங்களின் அளவிடல் குறிப்பின்மை, பிழையாக அளவிடல் மேற்கொள்ளல் அல்லது தொடர்பாடல் பிரச்சினைகள் போன்ற தொழில்நுட்ப நலிவுகளுக்கான உத்தரவாத சான்றிதழ் உரியதாகும். அதனால் நாரா நிறுவனம் கோரியுள்ள பெற்றரியின் ஆயுட்காலம் வழங்குனரின் மாதிரியுடன் இணங்குகின்றது. ஆழ வீச்சு அதாவது மீற்றர் 1 – 270 எங்களின் ஆராய்ச்சி தேவையை பூர்த்தி செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குழுவின் பொறுப்பாகும். |
| (ஏ) | நகர சபைகள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட ‘‘ஹொள்ளுப்பிட்டி முதல் தெஹிவளை வரை களியாட்ட கரையோரப் பிரதேசம் / கடல் | செயற்திட்ட கொடுப்பனவுகள் யாவும் மேற்கொள்ளல் உள்ளபடியான செயலாற்றலின் அடிப்படையில் ஆற்றப்பட்ட வேலைப் பத்திரத்தை அனுப்பி அது நிர்வாக பிரிவிலும் செயற்திட்ட முகாமைத்துவக் குழுவின் மூலமும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே செலுத்தப்பட்டிருந்தது. மாநகர மேல் மாகாண அமைச்சிற்கு | கொடுப்பனவுகளை செலுத்தும் போது காணப்படுகின்ற சட்ட விதிகளின் பிரகாரம் சரியான அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நீர் நிரல் ஒன்றை அபிவிருத்தி செய்தல்'' என்ற பெயரிலான செயற்திட்ட உடன் படிக்கையின் பிரகாரம் முகவர் நிறுவனத்தின் நேரடியான பதவியணியினருக்காக உள்ளபடியான செயலாற்றலின் அடிப்படையில் ரூபா 14,171,572 தொகை (ஆலோசனையாளர்கள் இருவருக்காக அங்கீகரிக்கப்பட்ட பணம் தவிர) அங்கீகரிக்கப் பட்டிருந்தது. அப்பெறுமதியை விஞ்சி நேரடி பதவியணியினருக்கு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 21,235,730 செலுத்தப்பட்டிருந்தது. இதுவரை அதற்கான அங்கீகாரம் பெறப்படாதிருந்துடன் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் இணங்கப்பட்ட தலைப்பின் அடிப்படையில் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நேரடி பணிகள் செயற்திட்டத்தின் தொழில்நுட்ப நடவடிக்கைகள் மாத்திரம் அல்லாதிருந்தமையை கவனம் செலுத்துகின்றோம். செயற்திட்ட நடவடிக்கைகள் தொழில்நுட்ப மற்றும் தொழில் நுட்பம் அல்லாத நேர் பணிகளுக்கு உரியதாகும்.<br><br>உரிய பணிகளை நிறைவேற்றுதல் நாரா நிறுவனத்தின் பணியாக இருந்தமையால் அதற்காக உரிய பதவியணியினர் அனுப்பி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக நிறுவனத்தின் அங்கீகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஊழியர்களின் பெயரில் தமக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள் வதற்கான தேவை ஏற்படவில்லை. | |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2011 ஆம் ஆண்டில் ரூபா 12 மில்லியன் செலவில் உற்பத்தி செய்யப்பட்ட ''தரணி'' கப்பல் தொழில்நுட்ப கோளாரின் | புதிய கப்பலொன்றை பெறவில்லையாயின் ஆழமான கடல் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு இந்தக் | ஆராய்ச்சிகள் தோல்வி அடைந்தமையை இனங்காணும்போது ஏனைய பணிகளில் |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | கப்பல் உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் பொருத்தமின்மையின் காரணமாகக் கொண்டு பாவனையிலிருந்து அகற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது.<br><br>ஒவ்வொரு தடவையும் ஆராய்ச்சிகள் வெற்றியளிக்காதிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாகக் காண்பிக்க முடியாது. தற்போது கண்காட்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஈடுடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மத்திய ஆய்வு கூடக் கட்டிட தொகுதி செயற்திட்டத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 3,900,673 தொகை மற்றும் 2020 ஆம் ஆண்டில் இருந்து கொண்டுவரப்படுகின்ற கற்பிட்டி இனப்பெருக்க கட்டிடத் தொகுதி நிர்மாணத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,631,963 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | கைவிடப்பட்ட செயற்பாடுகள் இல்லை. பொதுத் திறைசேரியில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியின் அடிப்படையில் தற்காலிகமாக நிதி வழங்குதல் தாமதமடைந்துள்ளது. வெளிநாட்டு மானியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. | நிதி ஏற்பாட்டுடன் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 செப்டம்பர் 13 ஆம் திகதி பிரதான களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 832,344 பெறுமதியான 154 பிளாஸ்ரிக் கொள்கலன், வளிப்பதனாக்கி இயந்திரம் மற்றும் போத்தல் குளிரூட்டி கொள்வனவு செய்யப்பட்டு 02 – 03 வருடங்களுக்கு | ரூபா 280,249 பெறுமதியான பிளாஸ்ரிக் கொள்கலன் - 1 ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு மாதிரியில் பொருந்தாமையின் அடிப்படையில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. மாற்று வழி தேவையின் | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடையிலான காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்றது.<br><br>ரூபா 206,496 பெறுமதியான வளிப்பதனாக்கி இயந்திரம் கப்பரதொட்ட பிரதேச நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட போதும் நிதி அமைச்சின் வழிகாட்டியின் அடிப்படையில் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் வரையறுக்கப்பட்டதன் பிரகாரம் தேவைகளுக்காக மாத்திரம் விநியோகிக்கப்படுகின்றது.<br><br>ரூபா 345,599 பெறுமதியான போத்தல் குளிரூட்டி சுற்றாடல் ஆய்வுப் பிரிவில் மிகுதி எக்ஸ்பிரஸ் பேல் கப்பல் விபத்திற்கு உட்பட்டதன் மூலம் இடம் பெற்ற சுற்றாடல் பாதிப்புக்களை பரிசோனை செய்வதற்கான நடவடிக்கைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | ரூபா 7,512,800 பெறுமதியான 9391 சிப்பி மாதிரிகளின் இருப்பு பல வருடங்களாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சிப்பி மாதிரிகளின் இருப்பு வெளிநாட்டு ஆராய்ச்சி குழுவினால் வழங்கப்பட்டதாகும். அவர்கள் நாரா நிறுவனத்துடன் மேற்கொண்ட பரிசோதனை நடவடிக்கைகள் தோல்வியடைந்ததன் அடிப்படையில் அந்த மாதிரி இருப்புக்களை பாவனையிலிருந்து அகற்றுவதற்கு இப்போது களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இருப்புக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஆண்டின் போது ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான | ஆறு நிலையங்களில் நிறைவேற்றப்பட்ட பணிகள் | முகவர் நிறுவனத்தின் சகல |

| | | | |
|---|---|---|---|
| | ஆறு பிரதேச ஆராய்ச்சி நிலையங்களுக்கான பராமரிப்பு மற்றும் செயற்பாட்டுச் செலவினமாக ரூபா 57,022,577 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்ததுடன் இந்த நிலையங்களுக்காக 52 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையங்களின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதற்கு இணையான 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த நிலையங்களின் செயலாற்றல் தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம், செயலாற்றல் திட்டம் அந்த திட்டத்தின் பிரகாரம் செயல் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பணிகளும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிட்டு அதற்குரிய செயல் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | லைட் வெயிட் டுவல் பிரீக்குயின்சி எகோ சவுண்டர் (Light Weight Dual Frequency Echo Sounder) நிறுவனம் இயந்திரமொன்று கொள்வனவு செய்யும் போது அதன் ஆழம் அளவிடும் (Depth Reading) உபகரணத்தின் ஆழம் அளவிடும் வீச்சில் மில்லி மீற்றர் 200 ஆக இருக்க வேண்டியமை பெறுகை செய்யப்பட்டிருந்த போதிலும் மில்லி மீற்றர் 75 ஆக வழங்கப்பட்டிருந்த பெறுகை ஏற்றுக்கொண்டு 2022 திசெம்பர் மாதம் ரூபா 1,889,975 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 75 மில்லி மீற்றர் போதுமானது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருந்ததுடன் அதற்காக அடிப்படையாகக் | ஆரம்ப கோரிக்கையின் போது குறிப்பிடப்பட்ட குடா அளத்தல் நடவடிக்கைகளுக்காக தேவையாக இருந்தது. கூறுவிலைகளை ஒப்பீடு செய்யும் போது ஆகக் குறைந்த மற்றும் இரண்டாவது ஆகக் குறைந்த விலைகளுக்கிடையே வேறுபாடு கணிசமான வீச்சில் காணப்பட்டமையினால் எங்களின் ஆரம்ப தேவை குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த உபகரணங்களால் நிறைவேற்றப்படுகின்றமையால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் குடாக்களில் ஆழ உபகரணங்கள் மாதிரியில் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய பெச் | பெறுகைக் குழு சரியான மாதிரிகள் பெறுகைகளைத் திட்டமிடும் போது தீர்மானித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்ளப்பட்ட விடயங்கள் கணக்காய்வில் வெளிப்படுத்தப்படவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 80210 ஆம் இலக்க உத்தியோகத்தர் 2002 ஒக்டோபர் 24 முதல் 2004 ஏப்ரல் 01 வரை பட்டப்பின் படிப்பு கற்கை நடவடிக்கைகளுக்காக அவுஸ்திரேலியாவிற்கு சென்றிருந்ததுடன் நாரா நிறுவனத்துடன் ரூபா 5,932,721 பெறுமதியில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார். உடன்படிக்கையின் பிரகாரம் 10 வருட சேவைக்காலம் நிறுவனத்தில் சேவையாற்ற வேண்டியிருந்த போதிலும் குறித்துரைத்த திகதியில் மீண்டும் சேவைக்கு வருகை தராமையினால் சேவையை விட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. உரிய பிணையாளரிடமிருந்து உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையை அறிவிடுவதற்கோ அல்லது அவருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்படாதிருந்ததுடன் உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம் குறைக்கப்பட்டதன் பின்னர் ரூபா 5,874,798 ஆன பிணை முறியில் மிகுதிப் பெறுமதி 05 வருடங்களில் 02 தவணைகள் வீதம் செலுத்துவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு 2022 ஆம் ஆண்டில் சமரசத்திற்கு உட்பட்டு அதற்காக நிர்வாக சபை அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த உத்தியோகத்தரிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை 2005 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை செலுத்தப்படாதிருந்தமையால் | வழக்கின் பெறுமதியாக உடன்படிக்கை பெறுமதியான ரூபா 5,932,721 தொகை மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>இந்த வழக்கு 2010 ஆம் ஆண்டு வரையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டு வரையில் இந்த உத்தியோகத்தர் அவுஸ்திரேலியா St. Lepndrils பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தைத் தொடர்ந்திருந்தார். 2010 ஆம் ஆண்டு வரையில் இந்த உத்தியோகத்தர் இலங்கைக்கு வருகை தராதிருந்ததுடன் எனினும் இந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக செலவான பணத்தை வழங்குவதற்கு தீர்மானித்த கௌரவ மாவட்ட நீதிபதியினால் எடுக்கப்பட்டிருந்ததுடன் வழக்குகளுக்காக செலவாகின்ற சகல பணத்தையும் அறவிடும் இயலுமை நிச்சயமற்றதாக இருந்தது.<br><br>மேற்கூறப்பட்ட இலக்கம் DMR/3930/10 என்ற வழக்கின் மூலம் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பணத்தை | உத்தியோகத்தர் வெளிநாடு செல்லும் போது உரிய சட்ட பிரமாணங்களுக்கு இணங்க சரியாக கணக்கீடு செய்தல், பிணையாளரிடமிருந்து விபரங்களைப் பெற்றுக்கொண்டு அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளை சரியாக அறவிடுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அந்த தொகைக்குரிய 15 வருடங்களுக்கு அறவிட வேண்டிய வட்டித் தொகை, வழக்கு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் என்பவற்றை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு முகவர் நிறுவனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

அறவிடுவதற்காக கணிசமான கிரயமொன்றை செலவிட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செலவாகின்ற மொத்த பணம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் உத்தியோகத்தர் நீதிமன்றத்திற்கு வருகை தருவதற்காக செலவாகின்ற பணத்தை முழுமையாக அறவிடுதல் நிச்சயமற்றதாகும். அது நீதிமன்றத்தின் விருப்பத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்படும் ஒன்றாகும்.

உரிய உத்தியோகத்தர் சமர்ப்பித்த ஒட்டுமொத்த நிபந்தனைகளும் நிர்வாக சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஓட்டுமொத்தமாகக் கவனத்திற் கொள்ளும் போது நிறுவனத்திற்கு ஆகக் குறைந்த கிரயமொன்றைச் செய்து உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தொகையை அறவிடுவதற்கு இயலுமான வகையில் அந்த நபர் சமர்ப்பித்த ஒட்டுமொத்த நிபந்தனைகளுக்காகவும் நிர்வாக சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இந்த நிபந்தனைகளின் பிரகாரம் அவர் செயற்படாதிருப்பாராயின் மீண்டும் DMR/3930/10 என்ற வழக்கில் முன்கொண்டு நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் தற்போது வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

கோவையிடப்பட்டுள்ளது.

மேலும் இதில் குறிப்பிடப்பட்ட மிகுதி அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.